செ.வெ.எண்: 45/மே நாள் : 25.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு- 2016-இல் மாணவ, மாணவியர்களின் தேர்ச்சி சதவீதம் மாநில அளவில் 8-ஆம் இடத்திலிருந்து 4-ஆம் இடத்திற்கு முன்னேற்றம்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு 2016-ன் முடிவுகள் இன்று (25.05.2016) வெளியானதைத் தொடர்ந்து, மாநில அளவில் இராமநாதபுரம் மாவட்டத்தின் ஒட்டுமொத்த தேர்ச்சி சதவீதம் கடந்த ஆண்டு பெற்ற 8-ஆம் இடத்திலிருந்து இவ்வாண்டு 4-ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளையும், அரசு பள்ளிகளில் பயின்று மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளையும் பாராட்டி புத்தகங்களை பரிசாக வழங்கினார்.

தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறையின் மூலம் இடைநிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கான அரசு பொதுத்தேர்வு 15.03.2016 முதல் 13.04.2016 வரை நடைபெற்றது. இத்தேர்வினை, இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 17,935 மாணவ, மாணவியர்கள் எழுதினார்கள். பள்ளிக்கல்வி துறையின் மூலம் இடைநிலைப்பள்ளி அரசு பொதுத்தேர்வுக்கான முடிவுகள் இன்று வெளியிடப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழை முதல் பாடமாகக் கொண்டு கல்வி பயின்ற இராமநாதபுரம், செய்யதம்மாள் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வி.ரக்ஷனபர்வீன் 497 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் மூன்றாம் இடத்தினையும், மாவட்ட அளவில் முதல் இடத்தினையும் பெற்றுள்ளார்.

பரமக்குடி லயன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வி.எஸ்.ஹர்ஷினி, இராமநாதபுரம் ராஜா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வி.எஸ்.ஜனனி, இராமநாதபுரம் செய்யதம்மாள் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வன்.ஜெகன்நாத், இராமநாதபுரம் வெளிப்பட்டிணம் செய்யதம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி (பெண்கள்) சார்ந்த செல்வி.எம்.லாவண்யா, செல்வி.டி.சங்கரி, இராமநாதபுரம் வெளிப்பட்டிணம் செய்யதம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி (ஆண்கள்) சார்ந்த் செல்வன்.வி.பிரசாந்த், இராமநாதபுரம் நேஷனல் அகாடமி மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வன்.எஸ்.எம்.ரேவந்த் குமார் ஆகிய 7 மாணவ, மாணவிகள் 496 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளனர்.

இராமநாதபுரம் வெளிப்பட்டிணம் செய்யதம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி (பெண்கள்) சார்ந்த செல்வி.எஸ்.அருணா, செல்வி.ஆர்.அசீரா சபானா, செல்வி.பாத்திமா நஸ்ரீன், செல்வி.பி.நந்தினி, செல்வி.எஸ்.சுஸ்மிதா, இராமேஸ்வரம் நேஷனல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வன்.ஆர்.பாபு ரியாஸ், இராமநாதபுரம் செய்யதம்மாள் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வன்.எஸ்.கார்த்தி பாபு, செல்வி.ஸ்னேகா ப்ரீத்தா, ஆர்.எஸ்.மங்களம் ஹோலி ஏஞ்சல்ஸ் மெட்ரிக் பள்ளியைச் சார்ந்த செல்வன்.ஆர்.மணிவாசகம், இராமநாதபுரம் நேஷனல் அகாடமி மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வி.கே.ரேஷ்மா, பேராவூர் எம்.ஜி.பப்ளிக் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வன்.ஜெ.ரோஷன் சபீகா, பார்த்திபனூர் கிரசண்ட் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வி.சத்யபிரபா ஆகிய 12 மாணவ, மாணவிகள் 495 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளனர்.

அதேபோல அரசு பள்ளிகளில் பயின்று ஆர்.எஸ்.மங்களம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வி.எம்.ஆதிலா பானு 490 மதிப்பெண்கள் பெற்று மாவட்டத்தில் முதல் இடத்தினையும், ஆலங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வி.பி.தர்ஷினி 488 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தினையும், கீரனூர் அரசு உயர்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வி.பி.ரிஷ்வானா, பனைக்குளம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வி.எச்.மெகர்நிஷா, தங்கச்சிமடம் அரசு மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த செல்வி.கே.மகாலெட்சுமி ஆகிய 3 மாணவிகளும் 487 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.

மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ, மாணவியர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்து வாழ்த்து பெற்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு புத்தகங்களை பரிசாக வழங்கி பாராட்டினார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 65 அரசு பள்ளிகளும், 15 அரசு உதவி பெறும் பள்ளிகளும், 51 மெட்ரிக் பள்ளிகளும் ஆக மொத்தம் 131 பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் 100 சதவீத தேர்ச்சி பெற்றுள்ளனர். அரசு பொதுத் தேர்வு முடிவுகளின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் மாணவ, மாணவியர்களின் ஒட்டுமொத்த தேர்ச்சி சதவீதம் 97.1% - ஆகவுள்ளது . இந்த தேர்ச்சி சதவீதமானது கடந்த ஆண்டை விட 0.73% கூடுதல் ஆகும். இத்தேர்ச்சி சதவீதத்தின் படி இராமநாதபுரம் மாவட்டம், தமிழக அளவில் தேர்ச்சி சதவீதத்தில் கடந்த ஆண்டில் இருந்த 8-ஆம் இடத்திலிருந்து இந்த ஆண்டு 4-ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) திரு.ஜேசுரத்தினம், இராமநாதபுரம் கல்வி மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் திரு.உசேன்கான்,பரமக்குடி கல்வி மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் திரு.டி.மோகன்குமார் உள்பட மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**